**ஏப்ரல் – 21**

# TNPSC துளிகள்

- SBI உயிர் காப்பீட்டு நிறுவனத்தின் புதிய மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக சஞ்சீவ் நவுட்டியால் நியமிக்கப்பட்டுள்ளார். SBI குழுமத்தில் முக்கியப் பொறுப்பு வகித்த அரிஜித் பாசு இதற்கு முன்னர் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றினார். திரு.நாட்டியால் வங்கிப் பணியாளர்களுக்கான இந்தியக் கழகத்தின் சான்றளிக்கப்பட்ட கூட்டிணைவாளர் ஆவார் (Certified Associate).
- இமாச்சலப் பிரதேச மாநில சுகாதாரத்துறை அமைச்சர், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட தாய்மார்களின் முழுமையான அன்பு என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- திரிபுரா முதலமைச்சர் பிப்லப் குமார் தேப் பிரதம மந்திரி கவுசல் விகாஸ் யோஜனா திட்டத்தை அகர்தலாவில் தொடங்கி வைத்தார். 1,16,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு 2020ல் பயிற்சி வழங்கும் இலக்கை அடைவதற்கான உறுதியை அவர் அளித்துள்ளார்.
    - திறன் மேம்பாட்டு இயக்குநரகத்தின் மூலமாக PMKVY திட்டத்தைச் செயலாக்கும் செய்யும் முதல் வடகிழக்கு மாநிலம் திரிபுரா ஆகும்.
- மூன்றாம் பாலினத்தவர்கள் தங்களுடைய வரி தொடர்பான பரிவர்த்தனைகளுக்காக நிரந்தர கணக்கு எண்ணை (Permanent Account Number - PAN) பெறுவதற்காக அவர்களை தனிநபர் வகை விண்ணப்பதாரராக அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசு வருமான வரி விதிகளை (வருமான வரிச் சட்டத்தின் பிரிவுகள் 139A மற்றும் 295 ஆகியவற்றின் கீழ்) திருத்தியுள்ளது.
- இயக்குனர் ஜெனரல் (Inspector General - IG) விஜய் சாஃபேகர், இந்திய கடலோரக் காவல்படையின் (மேற்கு மண்டலம்) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் இப்பணியிருந்த K R நவுட்டியால் கூடுதல் பொது மேலாளர் மற்றும் இந்திய கடலோரக் காவல் படைத் தலைவராக (கிழக்குக் கடல் பகுதி, விசாகப்பட்டினம்) நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்தியக் கடலோரக் காவல்படை (மேற்கு மண்டலம்) ஆனது மஹாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, கேரளா, டாமன் மற்றும் டையு மற்றும் இலட்சத் தீவுகள் ஆகிய பகுதிகளில் கடற்கரைப் பகுதிகளில் இருந்து பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் எல்லைப் பகுதிகள் வரை பரந்து காணப்படும் சிக்கலான பகுதிகளைக் கொண்டது.

# தேசியச் செய்திகள்


## பிரதம மந்திரி சுரக்ஸ பீம யோஜனா

- பிரதம மந்திரி சுரக்ஸ பீம யோஜனா திட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 13.41 கோடியாக உயர்ந்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் Auto-Debit முறையின் மூலமாக 2015-2016 காலகட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 8.85 கோடியாக இருந்தது. இது தற்போது (2017-2018)

13.41 கோடியாக உயர்ந்துள்ளது.

*பிரதம மந்திரி சுரக்ஸ பீம யோஜனாவைப் பற்றி*

- 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் விபத்தில் மரணமடைந்தவர்கள் அல்லது விபத்தினால் முழுவதும் ஊனமடைந்தவர்களுக்கான ரூ.2 லட்சம் மதிப்புடைய காப்பீடு மற்றும் பகுதியளவு நிரந்தர ஊனமடைந்தவர்களுக்கான ரூ.1 லட்சம் மதிப்பிலான காப்பீடு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.




- இத்திட்டத்தின் கீழான காப்பீடு ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 1 முதல் அதைத் தொடர்ந்த ஆண்டின் மே 31 வரையிலான காலகட்டத்தைக் கொண்டுள்ளது. பல்வேறு மத்திய அரசுத் துறைகளினால் செயலாக்கம் செய்யப்பட்டு வந்த விபத்துக் காப்பீட்டுக் கொள்கைகள் ஜீன் 1, 2017 முதல் பிரதம மந்திரி சுரக்ஸ பீம யோஜனா திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டன.
- பிரதம மந்திரி சுரக்ஸ பீம யோஜனா திட்டமானது வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுடன் ஒன்றிணைந்து பொதுத்துறை மற்றும் தனியார்துறை பொதுக்காப்பீட்டு நிறுவனங்களினால் வழங்க/நிர்வகிக்கப்படுகிறது.

## பாதுகாப்பு சம்பளப் பெட்டகத்தின் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்திய ராணுவம் பாதுகாப்பு சம்பளப் பெட்டகத்திற்காக HDFC வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய ராணுவம், HDFC வங்கியுடன் முதன் முதலாக 2011ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இவ்வொப்பந்தம் 13 மார்ச் 2015 அன்று புதுப்பிக்கப்பட்டது.
- தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தமானது, பணியிலுள்ள படைவீரர்கள்,

ஓய்வூதியதாரர்கள் மற்றும் வீரர்களின் குடும்பங்கள் ஆகியோரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மாற்றங்களை ஏற்படுத்தும் வசதி கொண்ட ஒரு ஒப்பந்தம் ஆகும்.

- தற்போது பாதுகாப்பு சம்பளப் பெட்டகம் தொடர்பாக இந்திய ராணுவம் 11 பொதுத்துறை மற்றும் தனியார்துறை வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

## 10-வது பாதுகாப்புக் கண்காட்சி

- தரைப்பகுதி, கடல் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அமைப்பு மீதான இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும் பாதுகாப்புக் கண்காட்சியின் 10-வது பதிப்பு காஞ்சிபுரம் மாவட்டத்தின் திருவிடந்தையில் நிறைவடைந்தது.
- நான்கு நாள் நிகழ்ச்சியான (ஏப்ரல் 11 -14) இக்கண்காட்சியானது முறைப்படி பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இக்கண்காட்சியில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்திய கப்பற்படை கப்பல்கள் வரலாற்றிலேயே முதல் முறையாக சென்னை துறைமுகத்தில் பார்வையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.
- அவைகளாவன
  1. சகயதாரி - எதிரியின் கண்ணில்படா போர்க்கப்பல்
  2. கமோர்டா - நீர்மூழ்கி எதிர்ப்பு போர் பாதுகாப்புக் கப்பல் (Anti-Submarine warfare corvette).
  3. சுமித்ரா – மேம்படுத்தப்பட்ட கடலோரக் காவல்படைக் கப்பல்
  4. ஐராவத் – நீர் நிலக் கப்பல் ( Amphibious ship)
  5. கிர்ச் – ஏவுகணைக் கப்பல்.
- நான்கு நாட்கள் நடைபெற்ற பாதுகாப்புக் கண்காட்சி “இந்தியா : வளரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்” என்ற கருத்துருவை அடிக்கோடிட்டுக் காண்பித்ததோடு பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் இந்தியாவின் திறமையைக் காட்சிப்படுத்தியது.
- கண்காட்சியில் இடம் பெற்ற 155 மி.மீ மேம்படுத்தப்பட்ட பீரங்கிகளுடன் நிலத்தில் இயங்கும் கருவிகளும் இக்கண்காட்சியில் மிகப்பெரிய கவனத்தைப் பெற்று இருந்தன.
- இந்த பீரங்கியானது (Advanced Towed Artillery Gun-ATAG) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் கல்யாணி குழுமம், டாடா பவர் மற்றும் பீரங்கித் தொழிற்சாலை (OFB) ஆகியவற்றுடன் கூட்டிணைந்து தயாரிக்கப்பட்டது.
- இந்தியா சொந்த பீரங்கியைக் கொண்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான ஜப்பானின் முதல் கடற்படைப் பிரிவு

- ஜப்பானின் ஒருங்கிணைக்கப்பட்ட ராணுவத் தலைமையான ஜப்பானிய சுய-பாதுகாப்புப் படை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான தன்னுடைய முதல் கடற்படைப் பிரிவை தென்-மேற்கு யூசு தீவுகளில் அமைந்துள்ள சாசேபோவுக்கு அருகிலுள்ள ராணுவத் தளத்தில் செயல்பாட்டுக் கொண்டு வந்துள்ளது.
- நீர்நில துரிதப் படை என அழைக்கப்படுகின்ற புதியதாக அமைக்கப்பட்ட இந்த அமைப்பு மற்ற நாட்டுப் படைகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட தீவுகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் வேற்று நாட்டுப்படைகளை விரட்டியடித்தல் போன்ற தன்மைகளைக் கொண்டுள்ளது.
- ஜப்பான் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான தன்னுடைய அரசியல் நிர்ணயக் கொள்கையில் போர் தொடுப்பதற்கான உரிமையைத் தவிர்த்தது.
- நீர்நில துரிதப் படையை சீனாவிற்கு எதிரான தன்னுடையப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக ஜப்பான் அறிமுகப்படுத்தியுள்ளது.
- கிழக்கு சீன கடல் பகுதிகளில் காணப்படும் பாறைகளாலான, மனிதர்கள் வாழாத தீவுச் சங்கிலிகளாக, பெய்ஜிங்கில் டியாவோயு தீவுகள் என்றும் டோக்கியோவில் சென்காகு என்றும் அறியப்படும் இத்தீவுகள் தொடர்பாக சீனா மற்றும் ஜப்பான் இடையே நீண்ட வரலாறுடைய பிராந்தியப் பிரச்சினைகள் உள்ளன.

## இந்தியாவின் பாதாம் நுகர்வு

- பிப்ரவரி வரையிலான இந்த சாகுபடி காலத்தில் (ஆகஸ்ட் 2017 முதல் ஜூலை 2018) ஸ்பெயின் மற்றும் சீனா ஆகிய நாடுகளை பாதாம் நுகர்வில் முந்திச் சென்று இந்தியா மிகப்பெரிய பாதாம் இறக்குமதியாளராக உருவெடுத்துள்ளது என கலிபோர்னியாவின் பாதாம் வாரியம் தெரிவித்துள்ளது.
- பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் ஸ்பெயின் 119 மில்லியன் பவுண்டுகள் என்ற அளவிலும், சீனா 138 மில்லியன் பவுண்டுகள் என்ற அளவிலும் பாதாமை இறக்குமதி செய்துள்ளன.
- 2016-2017 சாகுபடி காலகட்டத்தில் இந்தியா 167 மில்லியன் பவுண்டுகள் பாதாம் பருப்பை இறக்குமதி செய்து, சீனாவை முந்திச் சென்று 2-வது இடத்தைப் பிடித்தது. இது கடந்த ஆண்டை விட 33% அதிகமாகும். கடந்த ஆண்டில் இந்தியா 125 மில்லியன் பவுண்டுகள் அளவிலான பாதாமை இறக்குமதி செய்தது.
- 2016-17 காலகட்டத்தில் ஸ்பெயின் 210 மில்லியின் பவுண்டுகள் அளவிலான பாதாமை இறக்குமதி செய்து மிகப்பெரிய இறக்குமதியாளர் என்ற பெருமையைப் பெற்றது. அதே நேரத்தில் சீனா 150 மில்லியன் பவுண்டுகள் இறக்குமதி செய்தது.
- உலகின் மொத்த பாதாம் உற்பத்தியில் கலிபோர்னியா 80% பாதாமை உற்பத்தி செய்கிறது. இதில் 33%-ஐ அமெரிக்காவும் கனடாவும் நுகர்கின்றன. 67% பாதாம் 90 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.
- 2004-2005 காலகட்டத்தில் ஆசியா – பசிபிக் மண்டலத்திற்கு 25% அளவுக்கான ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஏற்றுமதி தற்போது 38% அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்த ஏற்றுமதியானது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தேவையை

அடிப்படையாகக் கொண்டது.

## சியர்ர லியோனின் ஜனாதிபதி

- சியர்ர லியோனின் புதிய ஜனாதிபதியாக ஜீரியஸ் மாடா பியோ, தலைநகர் ஃபிரீ டவுனில் பதவியேற்றுக் கொண்டார்.
- சியர்ர லியோனின் முன்னாள் ஆட்சிக்குழுத் தலைவரான திரு.பியோ சியர்ர லியோனை 1996 ஆண்டில் ஒரு குறுகிய காலத்திற்கு ஆண்டார்.
- சியர்ர லியோன் மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. மாட பியோ தற்போது ஆட்சியிலுள்ள அனைத்து மக்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான சமுரா கமராவை (பொருளாதார வல்லுநர்) வென்றார்.
- தற்போதைய ஜனாதிபதியான எர்னெஸ்ட் பாய் கொரோமா இரண்டு ஐந்து ஆண்டுகள் என்ற காலத்திற்குப் பிறகு பதவி விலகினார். இவருடைய பத்து ஆண்டுகள் ஜனாதிபதி காலகட்டத்தில் முதல் முறையாக எதிர்க்கட்சி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. சியர்ர லியோனில் உள்நாட்டுப் போர் 2002 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த பிறகான நான்காவது தேர்தல் இதுவாகும்.
- அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சியர்ர லியோன் நாடானது, ஃபிரீ டவுண் தீபகற்பத்தின் உட்பகுதியில் காணப்படும் வெண்மைநிற மணற் கடற்கரைகளுக்குப் பெயர் பெற்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியா அஞ்சல் அலுவலக கட்டண வங்கி

- இந்தியாவில் அஞ்சல் அலுவலக கட்டண வங்கி ஏப்ரல் 2018-ல் தனது சேவையைத் தொடங்கியது.
- இந்திய அஞ்சல் கட்டண வங்கி என்று அறியப்படும் இது நாட்டின் மிகப் பெரிய கட்டண வங்கியாகும்.
- 650 கட்டண வங்கிகள் நாட்டிலுள்ள 1.55 லட்சம் அஞ்சல் அலுவலகங்களுக்கு உதவி புரியும்.
- இதன் கீழ், தபால்காரர் மற்றும் ஊரக அஞ்சல் அலுவலகங்களால் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் டிஜிட்டல் கட்டண சேவைகள் வழங்கப்படும்.
- 2015 ஆம் ஆண்டு, RBI ஆனது கட்டண வங்கிகளாக செயல்படுவதற்காக இந்திய தபால் துறைக்கு கருத்தியல் முறையிலான முன்மொழிவை வழங்கியது. இந்த வங்கியின் கருத்துரு ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு.ரகுராம் ராஜன் அவர்களால் உருவாக்கப்பட்டது.

## சமூக ஊடக பணம் செலுத்து அமைப்பு

- தொகுக்கப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான ஐசிஐசிஐ வங்கி மின்னஞ்சல் (E-mail), கட்செவி அஞ்சல் (Whats App) போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இந்தியாவிலிருக்கும் பயனாளர்களுக்கு

பணம் அனுப்ப வெளிநாடுவாழ் இந்தியர்களை இயலச் செய்கிறது.

- சமூக ஊடக பணம் செலுத்து அமைப்பு எனப் பெயரிடப்பட்டுள்ள இது, இந்தியாவிலுள்ள எந்தவொரு வங்கியாலும் எடுக்கப்படாத முதல் முயற்சியாகும். பணம் அனுப்பப் பயன்படும் இவ்வங்கியின் செயலியான Money 2 India வில் இவ்வசதி உள்ளது.
- ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி ஆனது, எல்லை தாண்டிய சமூக ஊடகங்கள் வழியான பணம் அனுப்பும் வசதியை அனுமதிக்கும் சேவையைத் தொடங்கிய இந்தியாவின் முதல் வங்கியாகவும் உலகளவில் இச்சேவையை ஆரம்பித்த ஒரு சில நாடுகளின் வங்கிகளுள் ஒன்றாகவும் இருக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வு

- சமீபத்திய புதிய ஆய்வின்படி, 15 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா அதிக அளவு நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வைக் கொண்டுள்ளதோடு குறிப்பிட்ட வகையிலான புதிய நுண்ணுயிர் கொல்லிகளை இறுதி வாய்ப்பாக (Last Resort) பயன்படுத்திக் கொள்ளும் நாடுகளில் இந்தியா அதிகளவில் நுகரும் நாடாக இருக்கிறது.
- 2000 மற்றும் 2015 காலகட்டங்களில் இந்தியாவின் நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வு 103% அளவிற்கு உயர்ந்துள்ளது. இது குறைந்த மற்றும் நடுத்தர பொருளாதார நாடுகளில் உயர்ந்த அளவாகும்.
- 2000 – 2015 காலகட்டத்தில் 1000 நபர்களால் தினமும் நுகரப்படும் சராசரி நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வானது 63% ஆக உயர்ந்தது.
- இதனோடு ஒப்பிடும்போது உலகளவில் நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வு 65% அதிகரித்துள்ளது.
- பொதுவாகப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் கொல்லிகளின் செயல்பாடற்ற நிலையில் கடைசி வாய்ப்பாக பரிந்துரைக்கப்படும் மருந்தான ஆக்ஸோலிடிரோன்ஸ் எனும் புதிய வகை நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்விலும் 2012 ஆம் ஆண்டில் இந்தியா அமெரிக்காவை முந்திச் சென்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- நுண்ணுயிர்களின் எதிர்ப்புகளே நுண்ணுயிர் கொல்லிகளின் நுகர்வுக்கான முதன்மை காரணமாகும். இந்த எதிர்ப்பானது (நுண்ணுயிர் கொல்லிகளின் விளைவுகளைத் தாங்குதல் மற்றும் பரிணமிப்பதற்கான நுண்ணுயிரிகளின் திறன்) உலகளாவிய நோய்கள் மற்றும் இறப்புகளுக்கான முதன்மைக் காரணியாகும்.

- - - - - - - - - - - - - - -